# மெட்ரோ நிலையங்களில் தூய்மைப்பணிக்கு நவீன இயந்திரங்கள் அறிமுகம்

சென்னை, செப். 22: சென்னை மெட்ரோ ரயில் நிலையங்களில் தூய்மைப்பணிக்காக ஜெர்மனியில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

சென்னை மெட்ரோ ரயில் நிலையங்களைச் சுத்தமாக வைத்திருக்கும் வகையில், மெட்ரோ நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மெட்ரோ ரயில் நிலையங்களில் தூய்மைப் பணிக்காக ஜெர்மனியில் இருந்து நவீன தொழில்நுட்ப இயந்திரங்கள் வரவழைக்கப்பட்டு, மெட்ரோ ரயில் நிலையங்களில் சுத்தப்படுத்தல் மற்றும் பராமரிப்புக்கு பயன்படுத்தப்படவுள்ளன.

மெட்ரோ ரயில் நிலையங்களின் உள்ள பல்வேறு வகையான தளங்கள், மின் தூக்கிகள், நகரும் படிக்கட்டுகள், கண்ணாடி ஜன்னல்கள், அறைகளைச் சுத்தப்படுத்த இந்த நவீன இயந்திரங்களைப் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதில் தரையில் தண்ணீரைப் பயன்படுத்தி சுத்தப்படுத்துவதற்காக உயர் அழுத்தம் கொண்ட இயந்திரம் பயன்படுத்தப்பட உள்ளது. ஈரமான தரையை உடனடியாக உலர்த்துவதற்கு மற்றொரு நவீன இயந்திரம் பயன்படுத்தப்பட உள்ளது. இது தவிர்த்து, கலவை இயந்திரங்களில் மக்கும் குப்பைகளைப் போட்டு, உரமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக, இரட்டை குப்பைத் தொட்டிகள் ரயில் நிலையங்களில் வைக்கப்பட்டுள்ளன.

இதில் கிடைக்கும் மக்கும் குப்பை கலவை இயந்திரம் மூலம் பயன்படுத்தி, உரமாக மாற்றி ரயில் நிலையத்தின் பூங்காக்கள் மற்றும் பசுமையான பகுதிகளில் இயற்கை உரமாகப் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

மெட்ரோ ரயில் நிலையங்களில் நடைபெறும் தூய்மை பணியை கண்காணிக்கவும், சரிபார்க்கவும் செல்லிடப்பேசி செயலி அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என மெட்ரோ ரயில் நிர்வாக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.